இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்:

முன்னிலை:- திருமதி.பா.மணிமாலா M.Sc., M.Phil., முதல்வர்(பொ)

ந.க.எண்.195/ஆ /2025 நாள்: 03.09.2025

பொருள்: கல்லூரிக்கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – 07/2022 (தொகுதி-IV) இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தெரிவு செய்யப்பட்ட தேர்வாளர்கள் பட்டியல் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்பட்டது - திருமதி.C.சுகன்யா, இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணை வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித எண்:453/PSD-B1/2022 நாள்:25.07.2023
2. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:35681/பி1/2023, நாள்:23.11.2023
3. இவ்வலுவலக ந.க.எண்:570/அ/2023, நாள்:29.11.2023
4. சென்னை, கல்லூரி கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்:TNDCE/4777/2025-B1, நாள்:26.06.2025

---------------

பார்வை (1)-இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்திற்கிணங்க, பார்வை (2)-இல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி இராமநாதபுரம், அரசு மகளிர் கலைக் கல்லூரியில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் திருமதி.C.சுகன்யா என்பாரை நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி பார்வை(3)-இல் காணும் இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளில் திருமதி.C.சுகன்யா என்பாரை காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அன்னார் 29.11.2023 அன்று முற்பகல் பணியில் சேர்ந்தார்.

பார்வை(4)-இல் காணும் கடிதத்தில் திருமதி.C.சுகன்யா, இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் 29.11.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து திருமதி.C.சுகன்யா என்பாரை இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்ய ஆணை வழங்கப்படுகிறது.

பா.மணிமாலா 3-9-25

PRINCIPAL I/C
Govt. Arts College for Women
Ramanathapuram - 623 501.
3/9/25

பெறுநர்:
திருமதி.C.சுகன்யா,
இளநிலை உதவியாளர்,
அரசு மகளிர் கலைக் கல்லூரி,
இராமநாதபுரம்.

நகல்:
கல்லூரிக் கல்வி ஆணையர்
சென்னை-600 015 – தகவலின் பொருட்டு பணிந்தனுப்பலாகிறது.